

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நாடாளுமன்ற உறுப்பினர் என். ஆர். இளங்கோ சந்தித்து, ஒன்றிய அரசின் மும்மொழிக்கொள்கை திட்டத்தினை தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாததால், ஒன்றிய அரசு மாநிலத்திற்கான நிதியினை விடுவிக்காத நிலையில், தன்னுடைய மகன் நினைவு நாளையொட்டி, ராகேஷ் சட்ட அறக்கட்டளையின் சார்பில், "நம்ம ஊரு நம்ம பள்ளி" திட்டத்தின் கீழ், இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு பயன்படுத்திடும் வகையில் 10 இலட்சம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.3.2025) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி சந்தித்து, தனது மகன் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

## தமிழின உரிமைப் போராளி

# ஐயா பழ.நெடுமாறன் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, மார்ச் 12-

உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் ஐயா பழ. நெடுமாறன் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் ஐயா பழ. நெடுமாறன் அவர்களின் 93ஆவது பிறந்த நாளில் அவரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு எனது வாழ்த்துகளைத் தெரிவித்தேன்.**

**தமிழின உரிமைப் போராளியாக அவர் ஆற்றி வரும் தொண்டு தொடர்க!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.3.2025) முகாம் அலுவலகத்தில், பத்மஸ்ரீ விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பறை இசை கலைஞர் ஆர். வேல்முருகன் (வேலு ஆசான்) அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி கொளத்தூரில் நடைபெற்ற நமது பண்பாட்டுக் கலைகளை கொண்டாடும் விழாவில் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சியை நடத்தியமைக்காக சிறப்பு செய்தார். உடன் அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.3.2025) முகாம் அலுவலகத்தில், பத்மஸ்ரீ விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தெருக் கூத்து கலைஞர் புரிசை கண்ணப்ப சம்மந்தன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி கொளத்தூரில் நடைபெற்ற நமது பண்பாட்டுக் கலைகளைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சியை நடத்தியமைக்காக சிறப்பு செய்தார். உடன் அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா ஆகியோர் உள்ளனர்.



இலண்டன் நகரில் கடந்த 8.3.2025 அன்று முதல் நேரடி சிம்பொனி இசை நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு சென்னை திரும்பிய இசைஞானி இளையராஜா அவர்களை தமிழ்நாடு அரசின் சார்பில் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் (10.03.2025) நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் ஆகியோர் பொன்னாடை அணிவித்து மலர்க்கொத்து வழங்கி வரவேற்றனர்.

## நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில்– ஒன்றிய அரசுக்கு எதிராக

# "தமிழ்நாடு போராடும்: தமிழ்நாடு வெல்லும்"- கண்டன பொதுக்கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ அறிக்கை!

*நீலகிரி, மார்ச் 12-*

நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர் கே.எம். ராஜூ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒன்றிய பா.ஜ.க., நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு எனும் பெயரில் தமிழ்நாட்டின் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் ஜனநாயகத்தின் குரலை நசுக்கும் அநீதியை மக்களிடம் கொண்டு சென்று, அதன் பேராபத்தை மக்களுக்கு தெரிவித்திடும் வகையிலும், புதிய கல்விக் கொள்கை எனும் பெயரில் இந்தியை திணிக்க முயற்சிக்கும் ஒன்றிய அரசின் சூழ்ச்சியை மக்களிடம்



எடுத்துரைக்கும் நோக்கில் 12.3.2025 தமிழகம் முழுவதும் "தமிழ்நாடு போராடும்:தமிழ்நாடு வெல்லும்" எனும் தலைப்பில் கண்டன பொதுக்கூட்டங்கள் நடத்திட வேண்டும் என கழக தலைவர், தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அதன்படி, நீலகிரி மாவட்ட தி.மு.க., சார்பில் (12.3.2025-புதன்கிழமை) மதியம் 2 மணியளவில் உதகை ஏ.டி.சி., ஜீப் நிறுத்தம் முன்பு மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் - அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், தலைமைக் கழக சொற்பொழிவாளர்கள் போடி காமராஜ் மற்றும் நெல்லை முத்தையா ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

எனவே, நடைபெறும் கண்டன பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னணியினர், செயல்வீரர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் திரளாக கலந்து சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த எம்.பி.க்களை அநாகரிகமானவர்கள் என விமர்சனம் செய்த ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை கண்டித்து, கோவை அண்ணாசிலை முன்பு மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் கழகத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்நிகழ்வில் சேதுராமன் சிங்கை மு.சிவா, மார்க்கெட் மனோகரன், பாக்யராஜ் பதுருதீன்,தமிழ்செல்வன் மு.ரா.செல்வராஜ் ஏர்போர்ட் ராஜேந்தர் ,கல்பனாசெந்தில் ராமநாதன் போஸ், டவுன்பா.ஆனந்தன் ,அப்பாஸ் ஜெபமாலைதாஸ்,ஆனந்த், முருகானந்தம்,LPF ஆனந்த்,LPF வணங்காமுடி, மீனாலோகு துணைத்தலைவர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## இதுவரை ரூ.6 கோடியே 19 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 19 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 10–03–2025 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | தீ.கணேசன், ஒன்றிய பிரதிநிதி, அம்பேத்கர் நகர், அரூர், தருமபுரி மாவட்டம். | 25,000/– |
| 2. | எம். சுந்தரசாமி, பாலாஜி நகர், சுண்டக்காமுத்தூர், கோவை – 641 010 | 25,000/– |
| 3. | ஏ.பி.நாகப்பன், அங்கணகவுண்டன்புதூர், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம். | 25,000/– |
| 4. | எம். கார்த்திகேயன் (எ) கார்த்தி, வேலப்பநாயக்கன்வலசு, காங்கேயம், திருப்பூர் | 25,000/– |
| 5. | எம்.பி.ராஜு, மஞ்சூர், குந்தா பாலம் அஞ்சல், நீலகிரி மாவட்டம். | 25,000/– |
| 6. | மா. இராமகிருஷ்ணன், கிளாக்குளம், வீரவநல்லூர், திருநெல்வேலி | 25,000/– |
| 7. | பி.போஸ், கருப்பட்டி, கிராமம், வாடிப்பட்டி, மதுரை வடக்கு மாவட்டம். | 25,000/– |
| 8. | ரா.மாரியப்பன், கோடங்கால், கடம்பூர் பேரூர், தூத்துக்குடி வடக்கு மாவட்டம். | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |